1996 ஆகஸ்ட் 20]

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு மீனவர் நலத்திட்டங்களில் மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் மீனவர்களுக்கு 4000 இலவச வீடுகள் மின்விளக்கு வசதியுடன் கட்டி வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

[குறிப்பு:--ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

1987-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் சில்லரை சட்டம்-ஒழுங்குப் பிரிவுக்கு மாற்றுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் முக்கிய நிகழ்வு ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டு 1050 உதவி ஆய்வாளர்கள், அன்றிருந்த அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தங்களுடைய செல்வாக்கு காரணமாக 650 பேர் சட்டம்-ஒழுங்கு போன்ற பகுதிகளிலே அனுமதிக்கப்பட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள. மீதம் இருப்பவர்கள் ஆர்ம்டு ரிசர்வ் போலீஸிலும் (ஏ.ஆர்.) அதே போல டி.எஸ்.பி.-யிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதே தகுதி, அதே படிப்பு போன்ற எல்லா தகுதிகளும் இருந்தாலும்கூட அவர்கள் டி.எஸ்.பி., ஏ.ஆர். போன்ற பகுதிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தால் அவர்கள் மீண்டும் லா அண்ட் ஆர்டர் பிரிவிற்கு வரமுடியவில்லை என்றும், தங்களுடைய உரிமை பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் முறையீடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள்

ஏற்கெனவே ஏ.ஆர்.-லும் அதேபோல டி.எஸ்.பி.-யிலும் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை சட்டம் ஒழுங்கு பிரிவுக்குக் கொண்டு வருவாரா? அதேபோல 1993-ஆம் ஆண்டு காவலர்கள் தேர்விலே 396 காவலர்கள் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களையும் எடுத்துக்கொள்ள முதல்வர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு நீண்ட விளக்கத்தை அளித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஏனென்றால் காவல் துறை மானியம் விரைவில் வரவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படவிருக்கிறது. பயிற்சி முடித்தவர்களில் சட்டம்-ஒழுங்கு, குற்றப் பிரிவிற்கு மாற்றுவதற்கு பொருத்தமானவர்களை தேர்வு செய்யக்கூடிய பணியை மேற்கொள்ள ஒரு ஸ்கிரீனிங் கமிட்டி கடந்த கால அரசால் ஏற்படுத்தப்பட்டு இருந்தது. இப்போது அந்த ஸ்கிரீனிங் கமிட்டி தேவையில்லை என்று இந்த அரசு முடிவு செய்து பயிற்சி முடித்தவர்களும், முடிக்க இருப்பவர்களும்-எல் & ஓ அல்லது க்ரைம்-சட்டம்-ஒழுங்கு அல்லது குற்றவியல் பிரிவிற்கு மாற்றப்படுவார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இடையிலே அரை மணி நேரம் பிரேக் இருக்கிறது. ஆகையால் மற்ற விவரங்களை நாளை வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருப்பதையும் சேர்த்து நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் என்னுடைய அறையில் வந்து சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் வரட்டும். நான் கேட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.